## 1. வேளாண்மைச் சிக்கல்களும் உற்பத்தித் திறனும்

## (Agricultural Problems & Productivity)

வேளாண்மையின் வெற்றி தோல்வி அதன் உற்பத்தித் திறனைச் சார்ந்துள்ளது. வேளாண்மையின் எல்லா நிலைகளிலும் உற்பத்தித் திறன் குறைவாயுள்ளது. விவசாயத் தொழிலாளியின் உற்பத்தித் திறன் குறைவு; வேளாண்மையில் முதலீடு செய்த முதலின் உற்பத்தித் திறன் குறைவு; நிலத்தின் உற்பத்தித் திறனும் குறைவு. ஐந்தாண்டுத் திட்டக்காலங்களில் வேளாண்மை வளர்ந்துள்ளது என்றாலும் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது இது இன்னும் குறைவாகவே உள்ளது. மேலும் நாட்டின் சில பகுதிகளில் உற்பத்தி அதிகரித்துள்ளதென்றாலும் பிற பகுதிகளில் உற்பத்தி குறைவாகவே உள்ளது.

பட்டியல் : 1 சில நாடுகளில் வேளாண் மகசூல் (2004–05)

(டன் / எஃக்டேர்)

| நாடு | நெல் | கோதுமை | மக்.சோளம் | பருத்தி | எண்.வித்து |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 2.9 | 2.71 | 1.18 | 4.64 | 0.86 |
| அமெரிக்கா | 7.83 | – | 9.15 | 9.58 | 2.61 |
| சீனா | – | 4.25 | 4.9 | 11.1 | 2.05 |
| பாகிஸ்தான் | – | 2.37 | – | 7.60 | – |
| அதிகம் | எகிப்து | இங்கிலாந்து | அமெரிக்கா | சீனா | செர்மனி |
| | 9.8 | 7.7 | 9.15 | 11.1 | 4.07 |
| உலகம் | 3.96 | 2.87 | 3.38 | 7.33 | 1.86 |

ஆதாரம் : Government of India, *Economic Survey*, 2006-07, P.160.

1. சிக்கல்கள்

வேளாண்மையின் முக்கியமான சிக்கல்களையும் அதனால் உற்பத்தித் திறன் குறைவாக இருப்பதற்கானக் காரணங்களையும் நாம் தற்போது ஆராயலாம்.

## (அ) இயற்கைக் காரணங்கள்

**1. நீண்டகாலம் பயிரிடல் :** "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்தக் குடி" எனப் புறப்பொருள் வெண்பா மாலை என்ற நூல் கூறுகின்றது. இதனால் தொன்று தொட்டு தமிழ் மக்கள் தமிழகத்தில் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. எனவே, நீண்ட காலமாகவே நிலங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதனால் வளமிழந்த நிலங்களின் உற்பத்தித் திறன் குறைவாகவே உள்ளது. அதனால் கிடைக்கக் கூடிய வருமானமும் குறைவு. மேலும் ஏழ்மையின் காரணமாக விவசாயிகள் நிலம் இழக்கும் வளத்தைச் சரிகட்டுமளவிற்கு உரங்கள் இடமுடிவதில்லை.

**2. காடுகள் :** காடுகள் மற்றும் காட்டு வளங்கள் மழைப் பொழிய உதவுகின்றன. மண் அரிப்பைத் தடுக்கின்றன. பசுந்தாள் உரங்களைத் தருக்கின்றன. ஆனால் நாளுக்கு நாள் வகை தொகையின்றி காடுகளை அழிப்பதால் இப்பயன்களும் குறைந்து, உற்பத்தித் திறன் குறைகின்றது.

**3. தரிசு நிலங்கள் :** நிலத்தின் விலை உயர்வதால் நிலங்கள் தரிசாகப் போடப்படுவது குறைந்து விடுகின்றது. தரிசு நிலங்களில் கால்நடைகள் மேயலாம். அங்குள்ள மரங்களும் காடுகளும் மிகுந்த நன்மை பயப்பன. இவ்வசதிகள் இப்போதெல்லாம் கிடைப்பதில்லை.

**4. மண் அரிப்பு :** சரியான மண் அரிப்புத் தடுப்பு முறைகளைப் பின்பற்றாததால் வளமான இடங்களில்கூடப் பயிரிட முடியவில்லை

**5. வளமற்ற நிலம் :** இதுவரை பயிரிடப்படாமல் இருந்த தரிசு நிலங்கள் மக்கட்தொகைப் பெருக்கத்தினால் பயிரிடப்படுகின்றன. நிலவளம், நீர்வளம் ஆகியவை இங்கு போதிய அளவிற்கு இல்லாததால் இவற்றின் திறனும் குறைவாக உள்ளது.

**6. வானம் பார்த்த பூமி :** ஆற்றுநீர் அல்லது நிலத்தடி நீர்ப்பாசன வசதி இல்லாததால் பெரும்பான்மையான நிலங்கள் மழையையே நம்பியுள்ளன. பல சமயங்களில் மழை, பொய்த்து விடுகின்றது. விளைவு குறைகின்றது. நம் நாட்டில் பயிரிடப்படும் நிலங்களில் 70% நிலங்களுக்கு எந்தவித நீர்ப்பாசன வசதியும் இல்லை.

**7. பருவ மழையின் சூதாட்டம்** (A Game in Monsoon) **:** வேளாண்மை பருவ மழையின் சூதாட்டமாக இருக்கின்றது. மிகு மழை, போதா மழை, மழை இன்மை, பருவகாலத்தில் பெய்யாத மழை, சூறைக்காற்று, புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கையின் சீற்றத்தால் அடிக்கடி உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகின்றது.

**8. நீர்ப்பாசனம் :** நிலத்தடி நீர், ஆறு, ஏரி ஆகிய நீர்ப்பாசன வசதிகளும் போதிய அளவிற்கில்லை அல்லது அவைகளைப் பயன்படுத்த மிக அதிகமாக செலவாகின்றது.

**9. களராகுதல் :** சில பகுதிகளிலுள்ள தண்ணீர் வேதியியல் மாற்றங்களால் நிலங்கள் களராகி விடுவதாலும் உற்பத்தித் திறன் குறைவாக உள்ளது.

**10. நில உரிமை :** சொத்துரிமை, நில உரிமை முறை குத்தகை முறைகளும் உற்பத்திக்கு ஊக்கம் தருபவையாக இல்லை.

**11. அதிக மக்கள் சார்ந்திருத்தல் :** மக்கட் தொகை பெருக்கத்தினால், வேலை கிடைக்காத உழைப்பாளிகள் வேளாண்மையையே முக்கியத் தொழிலாக கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே பெரும்பான்மையான மக்கள் நிலத்தையே சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. இதனால் தலை வீத சராசரி நிலத்தின் அளவு குறைந்து கொண்டே வருகின்றது. இதனாலும் உற்பத்தித் திறன் குறைவாக உள்ளது.

## (ஆ) சாகுபடி முறைக் காரணங்கள்

**12. குறைந்த நிலம் :** பெருகி வரும் மக்கள் வெள்ளத்தால் சராசரியாக ஒருவருக்குக் கிடைக்கும் நிலத்தளவு குறைந்து கொண்டே வருகின்றது.

**13. வடிகால் வசதியின்மை :** ஆங்காங்கே சாலை, இரயில் பாதை, கட்டிடங்கள் ஆகியவைகளை அமைக்க நிலத்தின் மேற்பரப்பினை மேடாக்குகின்றனர். இதனால் மழைக் காலங்களில் வெள்ள நீர் விரைவாக வடிய முடியாமல், பயிர்கள் நாசமாகி உற்பத்திக் குறைகின்றது.

**14. அதிக குத்தகை :** சீரான நில உடைமை முறை நம் நாட்டில் இல்லை. நில வாரம்/குத்தகை அதிகம். எனவே நிலத்தில் நிலையான முன்னேற்றத் திட்டங்களைச் செயற்படுத்த யாருக்கும் ஆர்வமிருப்பதில்லை.

**15. பயிர் சுழற்சி :** இன்னும் பல விவசாயிகள் சரியான பயிர் சுழற்சி முறைமை களைப் பின்பற்றுவதில்லை. பயிரிட்ட பயிரையே மீண்டும் மீண்டும் பயிரிடு கின்றனர். மேலும், சில நீர் வளமுள்ள இடங்களில் ஆண்டு முழுவதும் நிலத் தில் பயிர் செய்கிறார்கள். கோடையில் நிலத்தைக் காயப் போடாததினாலும் உற்பத்தித் திறன் குறைவாக உள்ளது.

**16. சாணங்கள் எரிப்பு :** மாட்டுச் சாணத்தைப் பெரும்பான்மையோர் எரி பொருளாகப் பயன்படுத்துவதால் அவை நிலத்தில் உரங்களாகப் பயன் படுத்தப்படுவதில்லை.

**17. போதாக் கருவிகள் :** வேளாண்மையை மேற்கொள்ளத் தேவைப்படும் பல்வேறு கருவிகள் பழமையானவை; தேய்ந்தவை; உடைந்தவை பயன் படுத்தப்படுகின்றன. மேலும் வேளாண்மைக் கருவிகள் போதுமான எண்ணிக்கையில் இருப்பதில்லை. நவீனக் கருவிகளை வாங்க ஏழை விவசாயி களால் முடிவதில்லை; உற்பத்தித் திறனும் குறைவாக உள்ளது.

**18. கால்நடைகள் :** வேளாண்மையில் பயன்படுத்தப்படும் கால்நடைகள் மிகவும் தரங்குறைந்தவையாக உள்ளது.

**19. சிபாரிசுப்படி பயிரிடாமை :** நம் நாட்டில் உள்ள பெரும்பான்மையான விவசாயிகள், நிபுணர்களின் பரிந்துரையின்படி பல்வேறு இடுபொருள்களை பயன்படுத்துவதில்லை.

**20. பூச்சிகள் :** பல்வேறுப் பூச்சிகளாலும் நோய்களாலும் உற்பத்திக் குறை கின்றது. பே திய அளவிற்கு உரிய நேரத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்த முடிவதில்லை.

**21. பசுந்தாள் உரம் :** தழைகளில் பெரும்பகுதி பசுந்தாள் உரமாக்கப்படாமல் அடுப்பு எரிக்கப் பயன்படுகிறது.

22. ஒரே மாதிரிப் பயிரிடல் : அவ்வப்பொழுது நிலவும் விலை, நீர்பாசன வசதிகளுக்கு ஏற்ப விவசாயிகள் பயிரிடுவதில்லை. ஓர் ஊர்/பகுதியில் முதலில் ஒருவர் எதைப் பயிரிடுகின்றாரோ அதையே தான் பிற எல்லோரும் பயிரிடு கின்றனர். இதனால் அவர்களுக்குள் இடுமானப் பொருள்கள் வாங்குவதிலும் உற்பத்திப் பொருள்களை விற்பதிலும் போட்டி ஏற்பட்டு இலாபம் குறைகின்றது அல்லது இழப்பு ஏற்படுகின்றது.

23. விற்பனை : விளைந்த பொருட்களை விற்க போதிய வசதி இல்லை.

## (இ) பிற காரணங்கள்

24. செங்கல் சூளைகள் : கட்டிடங்கள் ஏராளமாக கட்டபப்படுகின்றன. இதற்குத் தேவையான செங்கற்களைத் தயாரிக்க வளமான மண்ணின் மேற்பகுதி பயன்படுத்தப்படுவதால் நில வளம் குறைகின்றது.

25. துண்டு நிலங்கள் : நம் நாட்டில் பெரும்பாலான நிலங்கள் மிகச் சிறு துண்டு நிலங்களாக உள்ளன. இங்கு புதிய சாகுபடி முறைமைகளைப் பின்பற்ற இயலாது. உற்பத்திச் செலவு அதிகம்; உற்பத்தித் திறன் குறைவு.

26. புதிய விவசாயிகள் : பல்வேறு நிலச் சீர்திருத்த முறைகளால் இதுவரை பயிர் செய்து பழக்கமில்லாதவர்களும் பயிரிட வேண்டிய கட்டாயத்திற்குள்ளா கின்றனர். இவர்களுக்கு முன் அனுபவம் இல்லாததால் நிலங்களில் உற்பத்தித் திறன் குறைவாகவே உள்ளது.

27. திறமைசாலிகள் நிலைப்பதில்லை : பருவ மழையின் சூதாட்டம், பழங்காலத்துக் கருவிகள், விளை பொருட்களுக்குப் போதிய விலையின்மை, வசதியற்ற கிராமப்புறச் சூழ்நிலை, 'தலைவிதியே கதி' என வாழும் வேளாண் பெருங்குடி மத்தியில் திறமைசாலிகள் வாழ விருப்பமில்லாமல் வேளாண்மையை விட்டு வெளியேறி விடுகின்றனர்.

28. தலைவிதி :. நிலத்தைச் சாகுபடி செய்யும்பொழுதும் பல்வேறு மூடநம்பிக்கைகள் மற்றும் தலைவிதி ஆகியவைகளை நம்புவதால் உற்பத்தித் திறனும் குறைவாக உள்ளது.

29. கடன் வசதி : நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் எளிதாகக் கிடைப் பதில்லை. கிடைக்கும் சொற்ப அளவுக் கடனையும் பெரு நிலக்கிழார்களே வாங்கிக் கொள் கின்றனர். நாட்டு மக்களில் 70% வேளாண்மையைச் சார்ந்துள்ளனர். மேலும் நாட்டு வருவாயில் சுமார் 30% வேளாண்மையிலிருந்து கிடைக்கின்றது. எனவே நிதி நிறுவனங்கள் தாங்கள் வழங்கும் கடனில் 30% வேளாண்மைக்கு வழங்குவது தானே நியாயமாகும். ஆனால் இதை விட மிகக்குறைவாகவே வேளாண்மைக்குக் கடனாகக் கொடுக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக அனைத்து வணிக வங்கிகள் தங்கள் மொத்த கடனில் 11% தான் 2001 ஆம் ஆண்டிலும் வேளாண்மைக்குக் கடனாக அனுமதித்துள்ளன.

30. பெரு நிலக்கிழார்கள் : இவர்கள் பெரும்பாலும் ஊராட்சித் தலைவர் களாக, கடன் கொடுப்பவர்களாக, வணிகர்களாகத் திகழ்கின்றனர். மொத்தக் கிராம மக்களையும் கட்டுப்படுத்துகின்றனர். இவர்களுக்கு நிலத்திலிருந்து குறிப் பிட்ட அளவு வருவாய் வந்தால் போதுமானது. எனவே வேளாண் வருவாயை அதிகரிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அப்படியே அதிக வருவாய் வந்தாலும் அதை வேளாண்மை மேம்பாட்டிற்குச் செலவிடாமல் ஆடம்பரச் செலவுகள் செய்து விடுகின்றனர்.

**31. குறைந்த விலை :** சென்ற 35 ஆண்டுகளில் தொழிற்சாலைப் பொருட்களின் விலை அதிகரித்த அளவிற்கு வேளாண்மை விளை பொருட்களின் விலை அதிகரிக்கவில்லை. குறைந்த விலை குறைந்த இலாபம். இதனால் வெறுப்புற்ற பலர் அதிகம் உற்பத்திச் செய்ய வேண்டுமென்ற ஆவல் இல்லாமலிருக்கின்றனர்.

**32. சேமிப்பு :** விளைந்த பொருட்களைச் சேமிக்கப் போதிய கொள்கலன்களும் இடமும் இல்லாததால் அறுவடை முடிந்த உடன் குறைந்த விலைக்கு விற்க வேண்டியுள்ளது.

**33. அங்காடி முறைமை :** முற்றுரிமைப் போட்டி நிலவுவதால் விவசாயிகள் விற்பதிலும் வாங்குவதிலும் நட்டப்படுகின்றனர்.

**34. செய்திப் போக்குவரத்து :** பல்வேறு அங்காடிகளில் நிலவும் விலை பற்றிச் சரிவரத் தெரியாததால் உள்ளூர் அங்காடிகளில் அதிக விலைக்கு வாங்கவும் குறைந்த விலைக்கு விற்கவும் வேண்டியுள்ளது.


**35. பாதக விலை நிலை :** விவசாயிகள் பயிரிட ஆரம்பிக்கும்போது விதைத் தானியங்களின் விலை அதிகம். ஆனால் அறுவடை முடிந்து விற்கும்போது விலை குறைவு.

**36. இயந்திரமில்லா உழைப்பு :** தொழிற்சாலையில் இயந்திரங்களுடன் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். எனவே தொழிலாளர்கள் சோம்பேறித் தனமாக வேலை செய்ய இயலாது. ஆனால், வேளாண்மையில் பெரும்பாலும் இயந்திரங்கள் இல்லை. எனவே தொழிலாளர்கள் முழு அளவில் உழைக்காமல் ஏமாற்றுகின்றனர்.

**37. விசுவாசமற்ற ஊழியர்கள் :** விசுவாசமுள்ள ஊழியர்கள் போதிய அளவு கிடைப்பதில்லை. இதனால் அதிக உழைப்பு தேவைப்படக் கூடிய காய்கறிகள், புன்செய், தானியப் பயிர்கள் குறிப்பாக பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் அதிக அளவில் பயிரிட முடிவதில்லை.

**38. குறைவான ஆராய்ச்சி :** அரசின் உதவியின்றியே தொழிற்சாலைகள் சொந்தமாக ஆராய்ச்சி நிலையங்களை அமைத்துப் புதிய செய்முறைகளைக் கண்டுபிடிக்கின்றன. ஆனால் வேளாண்மையில் தனியார் ஆராய்ச்சி நிலையங்களே இல்லை எனலாம். நிதிப் பற்றாக்குறையினால் அரசாங்கத்தின் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களின் செயல்திறன் குறைவாக உள்ளது. மேலும் இவ்வகை நிலையங்களில் கிடைக்கும் வெற்றி விவசாயிகளின் பண்ணைகளில் கிடைப்பதில்லை. எடுத்துக்காட்டாக நமது ஆராய்ச்சிப் பண்ணைகளில் முட்டைகோஸ் 20.5 (அனைத்தும் எஃக்டேரில் விளைந்த மகசூல் டன்களில்), காலிபிளவர் 50.35, வெங்காயம் 20.5 என மகசூல் இருக்கும்பொழுது நமது விவசாயப் பண்ணைகளில் இந்த அளவுகள் முறையே 6.03, 7.33, 7.5 என்று மட்டுமே இருந்தன.[1]

**39. நச்சுச் சுழல்**



**40. வளர்ந்த நாடுகளின் ஆதிக்கம் :** அமெரிக்கா, அய்ரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டு விவசாயிகளுக்கு ஏராளமாக மானியங்கள் அளித்து, ஏற்றுமதி செய்கின்றன. (மானியம் அளிப்பது WTO-க்கு எதிரானதாகும்.) இதனால் இந்தியா உட்பட பல வளரும் நாடுகளிலும் விலைக் குறைந்து, நட்டமடைந்து, ஏராளமான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.

**41. இருதலைக் கொள்ளி எறும்பு :** விவசாயிகளுக்குக் குறைவாக விளைந்தாலும் வருவாய் குறைவுதான், அதிகம் விளைந்தாலும் தானியங்களின் விலை குறைவதால் நிகர வருவாய் குறைந்து விடுகின்றது. இவ்வாறு இருதலைக் கொள்ளி எறும்பு போல் விவசாயிகள் அதிகம் விளைவிக்க ஆர்வம் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள்.

**42. அப்பாவி விவசாயிகள் :** நமது விவசாயிகள் கடின உழைப்பாளிகள்; எளிதில் பிறரை நம்பி விடுவர்; நேர்மையானவர்கள்; சூதுவாது அறியாதவர்கள்; ஆனாலும் படிக்காதவர்கள்; தலைவிதியை நம்புகிறவர்கள்; தங்களுக்குள் ஒற்றுமை இல்லாதவர்கள்; பழமையில் வாழ்வதையே பேரின்பமாகக் கொள்வர். மேலும் உற்பத்தியை அதிகப்படுத்த போதிய கருவிகளோ, நிதிவசதிகளோ, வாய்ப்புகளோ இருப்பதில்லை. எப்பொழுதாவது உற்பத்தி அதிகரித்தாலும் அதற்குக் கிடைக்கும் விலை மிகவும் குறைவு. இவ்விலைக் குறைவால் சலிப்புறுகின்றனர். விவசாயிகள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என மனத்திடம் கொள்ளாத வரை வேளாண்மையில் உற்பத்தியை அதிகரிக்க முடியாது.

**43. சலுகை பறிபோதல் :** சலுகை விலையில் வேளாண்மைக்கென்றே விற்கப்படும் வேதியியல் உரங்கள் போன்றவற்றைத் தவறான வழியில் தொழிற்சாலைகள் வாங்கி விடுவதால், இவைகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை.[1] இவ்வாறே வேளாண்மைக்கென ஒதுக்கப்படும் பல்வேறு இடுமானப் பொருட்கள் பிற துறைகளால் பறிக்கப்படுகின்றன.

## 2. வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வழிமுறைகள்

உற்பத்தியை அதிகரிப்பது விவசாயிகளின் கைகளில் மட்டுமில்லை. விவசாயிகள், கிராம மக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கடன் நிதி வழங்கும் நிறுவனங்கள், அரசு ஆகியோர் இணைந்து பாடுபட்டால் தான் உற்பத்தியை அதிகரிக்க முடியும். நிலத்தின் மண், நீர்பாசன வசதி, வேளாண்மைக் கருவிகள், மக்கள் உழைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைந்து பாடுபட்டால் தான் வெற்றி கிட்டும். உற்பத்தியை அதிகரிக்க சில முக்கியமான வழிமுறைகளை நாம் இங்குத் தொகுத்து கூறலாம்.

முதல் 9 வழி முறைகள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) கருத்தாகும்.

1. வேளாண்மைப் பொருட்களின் விலை விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடியதும், மிகுந்த ஏற்றத்தாழ்வில்லாமல் சீராகவும் இருக்க வேண்டும்.

2. போதிய அளவு விற்பனை வசதியிருத்தல் வேண்டும்.

3. நியாயமான குத்தகை முறை செயல்படுத்தப்பட வேண்டும்.

4. தற்கால முறையில் சாகுபடி செய்ய விவசாயிகளுக்குக் குறிப்பாக சிறு விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் அளிக்க வேண்டும்.

5. வேதியியல் உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் போன்ற வேளாண்மை இடுமான பொருள்களை நியாய விலையில் விவசாயிகளுக்கு விற்க வேண்டும்.

6. நவீன முறைச் சாகுபடி முறைமைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளும் வகையில் விவசாயிகளுக்குக் கல்வியறிவு அளிக்க வேண்டும்.

7. பெரும் பாசனத் திட்டங்கள், நிலச் சீர்த்திருத்தங்கள் போன்ற தனியொரு விவசாயியால் முடியாத செயற்திட்டங்களை நிறைவேற்ற அரசு தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

8. செறிந்த முறைச் சாகுபடியையும் விரிந்த ம்றைச் சாகுபடியையும் அறிவியல் முறைப்படி சாகுபடி செய்தல் வேண்டும்.

9. பயிர் செய்வதுடன் பால் பண்மை, கோழிப்பண்ணை, மீன் வளர்ப்பு போன்ற வேளாண்மை சார்ந்த தொழில்களையும் இணைத்து விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும்.

## பிற வழிமுறைகள்

10. நம் நாட்டில் காடுகளின் அளவு குறைந்து கொண்டே வந்து தற்போது மொத்த நிலப்பரப்பில் சுமார் 19.5% தான் காடுகள் உள்ளன. இது 33% ஆக இருந்தால் நல்லது. காடுகள் இருக்கும் நிலப்பரப்பளவை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியம் (National Wastelands Development Board) 1985-86ல் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் ஏராளமான நிலத்தில் காடுகளை உருவாக்கியுள்ளது. வனங்கள் கொள்கை மாற்றப்பட்டு 1988ஆம் ஆண்டில் புதிய கொள்கை அறிவிக்கப்பட்டது. இதனால் காடுகளின் பரப்பளவு அதிகரிக்க வாய்ப்புண்டு.

11. வேளாண்மையில் ஈடுபட்டுள்ளோர்க்குப் பிற துறைகளில் ஏராளமான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும். இதனால் விவசாயிகளின் எண்ணிக்கைக் குறைந்து, அவர்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

12. நிலம் ஒரு குறிப்பிட்டளவிற்குக் கீழ் பிரிக்கப்படக் கூடாது என அரசு சட்டமியற்றுவதன் மூலம், நிலங்கள் மிகச் சிறு துண்டுகளாவதைத் தடுக்கலாம். மிகச் சிறு துண்டு நிலங்களை ஒன்று சேர்க்கலாம். இதற்குக் கூட்டுறவு வேளாண்மைச் சங்கம் சிறந்தது.

13. ஆற்றோரம், தரிசு நிலம், சாலைகள் ஓரம், வரப்பு இங்கெல்லாம் மரங்கள் வளர்க்க மக்களை ஊக்குவிக்க வேண்டும்.

14. களர் நிலங்களை நல்ல நிலங்களாக மாற்றவும் மண் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கவும் அரசே உரிய அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.

15. உழுபவருக்கே நிலவுரிமை என்ற கொள்கையை அரசாங்கம் முனைப்புடன் செயற்படுத்த வேண்டும்.

16. கிராமங்களுக்குப் போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து போன்ற வசதிகளை விரிவுப்படுத்த வேண்டும்.

17. உற்பத்திக்கு உதவாத செலவுகளை தவிர்க்க வேண்டும். முன்பு இந்துக் களால் பின்பற்றப்பட்ட உடன்கட்டை ஏறுதல், பெண் குழந்தைகளைக் கடலில் தூக்கி எறிதல் போன்றவைகள் இன்று பழங்கதைகளாகி விட்டன. அதேபோல் தலைவிதி, நல்ல நேரம், ஆடம்பரக் கோவில் திருவிழாக்கள், ஆடம்பரத் திருமணங்கள் போன்ற பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகமாக இருக்கக் கூடியவற்றையும் மக்கள் கைவிட அரசு முனைப்புடன் செயற்பட வேண்டும்.

18. வாழ்க்கை வசதிகளை, அதிகப்படுத்துவதன் மூலம் கிராமங்களைத் திறமைச்சாலிகளைக் கவரும் இடங்களாக மாற்றலாம்.

19. ஒவ்வொரு வட்டந்தோறும் அவ்வப்பகுதிப் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்த வேண்டும்.

20. அரசும் மக்களும் இணைந்து முனைப்புடன் நச்சுச்சுழலை உடைக்க வேண்டும். உதாரணமாக வருவாயை அதிகப்படுத்துவதன் மூலம் இச்சுழலை உடைக்கலாம்.

21. மானிய விலையில் சேமிப்புக் கொள்கலன்களை அரசு விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

22. கூட்டுறவு மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அதிக அளவில் ஏற்படுத்துவதன் மூலம் தனியார் வணிகர்களின் முற்றுரிமைகளையும் தில்லு முல்லுகளையும் உடைத்தெரியலாம்.

23. ஆறு, ஏரி, நிலத்தடி, நீர்பாசன வசதிகளை அதிகரிக்க வேண்டும். கூட்டுறவு நீர்ப்பாசனங்களையும் விரிவுபடுத்த வேண்டும்.

24. சாலைகளை அமைப்பது போன்றே வடிகாலுக்குத் தேவைப்படும் நிலங் களை அரசே விலைக்கு வாங்கி வடிகால் வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

25. சாதாரணமாக விளைவதைவிட வேளாண்மைப் போட்டிகளில் பன்மடங்கு அதிகம் விளைவிக்கப்படுகின்றது. உற்பத்தித் திறன் அதிகரிக்க முடியாததல்ல என்பதை இது நிரூபிக்கின்றது. விவசாயிகளுக்கு இடுபொருட்களை நியாய விலையில் உரிய நேரத்தில் வழங்கினால் உற்பத்தியை எல்லோரும் அதிகரிப்பார்கள்.

**26. நியாயமான விலை :** தொழிற்சாலைப் பொருட்களின் விலை அதிகரிக்கும் விகிதத்திற்குக் குறையாமலாவது வேளாண்மைப் பொருட்களின் விலை அதிகரிக்குமாறு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அளிப்பைக் கட்டுப் படுத்தினால் விலை அதிகமாகும். விளைப் பொருட்களைச் சேகரித்தல், தரவாரியாகப் பிரித்தல், பதப்படுத்துதல், நுகர்ச்சியாளர்களுக்கு நேரடியாக விற்றல் ஆகிய அனைத்துப் பணிகளையும் ஒரே கூட்டுறவுச் சங்கம் மேற் கொள்ள வேண்டும். கைத்தறி மற்றும் விற்பனை ஆகியவைகளில் இம்மாதிரிக் கூட்டுறவு நிறுவனங்கள் வெற்றியடைந்திருப்பதை இதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம். இதனால் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்ச்சியாளர்களுக்கும் இடையிலுள்ள இடைத் தரகர்களும் ஒழிக்கப்படுவர்.

**27. கடன் வசதி :** அரசு, கூட்டுறவு மற்றும் வணிக வங்கி உட்பட எல்லா நிதி நிறுவனங்களும் வேளாண்மைக்குக் குறைந்த வட்டியில் எளிதில் கடன் கொடுக்க மேலும் முன் வரவேண்டும்.

**28. வருமானத்தை அதிகமாக்குதல் :** அதிக உற்பத்தி என்பதைவிட விவசாயிகளுக்கு அதிக வருமானம் என்பதே வேளாண்மையில் காணப்படும் பல்வேறு சிக்கல்களைப் போக்குவதற்கு ஏற்ற வழியாகும். வருவாயை அதிகப்படுத்த முக்கியமான வழி விளை பொருட்களுக்கு அதிக விலை கிடைக்கும்படி செய்வதாகும்.

29. தகுந்த பயிர் சுழற்சி மூலமும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், ஊடுபயிரிடுதல் போன்றவை மூலமும் சுமார் 50% – 60% நிலத்தின் உற்பத்தியை அதிகப்படுத்தலாம்.

30. முறையாக உரங்களைப் பயன்படுத்துவதால் 30%ம், தேர்வு விதைகளைப் பயன்படுத்துவதால் 5 – 10%ம், பூச்சிகளைத் தடுப்பதன் மூலம் 20%ம் உற்பத்தியை அதிகப்படுத்தலாம் என டாக்டர் பர்னஸ் கூறுகின்றார்.[1]

**3. உற்பத்தித் திறனின் போக்கு**

வேளாண்மையில் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளதின் முக்கியப் போக்கினை நாம் காணலாம்.

**1. நாட்டில் மகசூல் அதிகரித்துள்ளது :** அனைத்துப் பயிர்களின் மகசூலும் அதிகரித்துள்ளன. எடுத்துக்காட்டாக முதலாவது அய்ந்தாண்டுத் திட்டம் தொடங்குவதற்கு முந்தைய ஆண்டான 1950–51ல் எஃக்டேருக்கு 522 கிலோ கிராமாகயிருந்த அனைத்து உணவு தானியங்களின் மகசூல் 2005–06ல் 1,708 ஆக உயர்ந்தது. சில குறிப்பிட்ட பயிர்களின் மகசூல் அளவுகளைப் பட்டியல் எண்.2 தெளிவாக்குகின்றது.

பட்டியல் எண் 2 : முக்கிய பயிர்களின் வளர்ச்சி விகிதம்

| பயிர்கள் | 1950–51 மகசூல் | 2005–06 மகசூல்[1] | அதிகரித்த விழுக்காடு |
|---|---|---|---|
| அரிசி | 668 | 2,093 | 213.32 |
| கோதுமை | 664 | 2,607 | 292.62 |
| அனைத்து உணவு தானியம் | 552 | 1,708 | 209.42 |
| கரும்பு[2] | 33 | 65.6 | 98.78 |
| பருத்தி | 88 | 375 | 326.14 |
| சணல் | 1,043 | 2,107 | 102.01 |
| எண்ணெய் வித்துக்கள் | 481 | 1,000 | 107.90 |
| நிலக்கடலை | 775 | 1,176 | 51.74 |

குறிப்பு : விழுக்காடு தவிர பிற யாவும் எஃக்டேருக்கு கிலோ கிராமில்.
1. தற்காலிக விவரம் 2. எஃக்டேருக்கு டன்களில்.

ஆதாரம் : Government of India, *Economic Survey, 2006-07*, P.S -18.

**2. பன்னாட்டு மகசூலில் இந்தியாவின் பங்கு குறைவே :** பிற நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்தியாவில் மகசூல் குறைவாகவே உள்ளது. சீனா, சப்பான். அமெரிக்கா ஆகிய நாடுகளில் மகசூல் இந்தியாவைவிட அதிகமாகவே உள்ளது. மேலும் உலக சராசரியும் இந்தியாவைவிட அதிகமாகவே உள்ளது.

**3. ஒரே சீராக இல்லாத வளர்ச்சி :** பல்வேறு வேளாண்மைப் பொருள்களின் மகசூலும் ஒரே சீராக இல்லை. எடுத்துக்காட்டாக பட்டியல் உணர்த்தியவாறு கோதுமை, அரிசி, பருத்தி போன்றவை வளர்ந்த அளவிற்கு நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள், சணல், கரும்பு போன்றவை வளரவில்லை.

**4. ஏற்றத்தாழ்வு :** நாட்டில் கேரளம், மேற்கு வங்காளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் நிலம் மற்றும் தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் அதிகமாயுள்ளது. ஆனால் மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் குறைவாயுள்ளது. இதனால் பொருளாதார வளர்ச்சியிலும் ஏற்றத் தாழ்வு நிலவுகின்றது. இந்திய வேளாண்மையும் விவசாயிகளும் நியாயமான வருவாய் இல்லாமல் வாடுகின்றார்கள்.

பட்டியல் எண் 3 : சில பயிர் உற்பத்தி அளவில் (மி.டன்) முதல் 3 மாநிலங்கள் (2004 – 05) (உற்பத்தி அளவு – தற்காலிக விவரம்)

| பயிர் | மாநிலம் | உற்பத்தி | மாநிலத்தின் % |
|---|---|---|---|
| மொத்த உணவு தானியம் | உத்தர பிரதேசம் | 39.86 | 19.14 |
| | பஞ்சாப் | 25.19 | 12.09 |
| அரிசி | மேற்கு வங்கம் | 14.86 | 16.32 |
| | ஆந்திரம் | 11.69 | 12.84 |
| | உத்தர பிரதேசம் | 11.13 | 12.23 |
| கோதுமை | உத்தர பிரதேசம் | 23.57 | 33.92 |
| | பஞ்சாப் | 14.49 | 20.85 |
| | அரியானா | 8.88 | 12.78 |
| சிறு தானியங்கள் | மராட்டியம் | 6.71 | 19.35 |
| | கர்நாடகம் | 6.16 | 17.77 |
| | இராஜஸ்தான் | 3.90 | 11.25 |
| பயிறு வகைகள் | மத்திய பிரதேசம் | 3.23 | 24.64 |
| | உத்தர பிரதேசம் | 2.21 | 16.86 |
| | மராட்டியம் | 1.80 | 13.73 |
| நிலக்கடலை | குஜராத் | 3.22 | 40.91 |
| | மத்திய பிரதேசம் | 1.37 | 17.41 |
| | தமிழ்நாடு | 1.16 | 14.74 |
| கரும்பு | உத்தர பிரதேசம் | 131.42 | 41.80 |
| | மராட்டியம் | 62.70 | 19.94 |
| | தமிழ்நாடு | 32.30 | 10.27 |